අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 | +94112785818
info@moe.gov.lk | www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. } ED/09/17/05/SI

ඔබේ යොමුව / உமது இல. / Your Ref. }

දිනය / திகதி / Date } 2024.06.06

சுற்றுநிருப இலக்கம் - 2024/14

அனைத்து மாகாண பிரதம செயலாளர்கள்,
அனைத்து மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
அனைத்து மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்கள்
அனைத்து கோட்டங்களுக்குப் பொறுப்பான பி.க.ப/ உ.க பணிப்பாளர்கள்,
அனைத்து அதிபர்கள்

# பாடசாலைகளில் இளம் புத்தாக்குனர் கழகங்களை நிறுவுதல் மற்றும் புத்தாக்க போட்டிகளை நடாத்துதல்.

## 1.0 அறிமுகம்

எதிர்கால வேலை உலகின் சவால்களுக்கு வெற்றிகரமாக முகங்கொடுக்கக்கூடிய பிள்ளைகள் சந்ததியினரை பாடசாலை முறைமையினூடாக உருவாக்குவது காலத்தின் தேவையாக உள்ளது. நவீன போக்குகளுடன் பொருந்தக்கூடிய, கற்கைகள் மற்றும் ஆராய்ச்சிகளினூடாக சிந்தனையை ஆக்கபூர்வமாக வழிப்படுத்தி புத்தாக்கங்களை உருவாக்குவதற்கும், அவற்றை மேம்படுத்தி காப்புரிமைகளைப் (பேட்டண்ட்) பெற்றுக் கொள்வதனூடாக முயற்சியாண்மையினை நோக்கி பாடசாலை மாணவர்களைக் கொண்டு செல்வதற்கும், பாடசாலை புத்தாக்குனர் கழகங்களை உருவாக்குவதனூடாக எதிர்பார்க்கப்படுகின்றது. அதன் படி பாடசாலைகளில் இளம் புத்தாக்குனர் கழகங்களை நிறுவுவதற்கு நடவடிக்கையெடுக்க வேண்டும் என்பதுடன் அவ் விடயம் தொடர்பாக கீழே தரப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் ஆலோசனைகளைப் பின்பற்ற வேண்டும்.

## 2.0 பாடசாலை புத்தாக்குனர் கழகங்களை நிறுவுதல்.

2.1 நாட்டின் அனைத்து 1AB, 1C, 2 வகை பாடசாலைகளிலும் இளம் புத்தாக்குனர் கழகங்களை நிறுவுவதற்கு நடவடிக்கையெடுத்தல் வேண்டும். இவ் விடயம் தொடர்பாக உரிய ஆலோசனைகளை பணிப்பாளர், இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு, ஐந்தாம் மாடி, “மெஹெவர பியச” கட்டடம், கொழும்பு 05 எனும் முகவரியிலிருந்து பெற்றுக் கொள்ள முடியும்.

ගරු අමාත්‍යතුමා / கௌரவ அமைச்சர் / Hon. Minister } +94112784832 | +94112784825 | minister.education@moe.gov.lk

ලේකම් / செயலாளர் / Secretary } +94112784811 | +94112785162 | secretary.education@moe.gov.lk

2.2 பாடசாலைகளில் இளம் புத்தாக்குனர் கழகங்களை நிறுவியதன் பின்னர் அக்கழகங்களை இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் இணையத் தளத்தில் (www.slic.gov.lk ) பதிவு செய்வதற்கு நடவடிக்கையெடுத்தல் வேண்டும். அதனுடன் இணைந்ததாக இவ் விடயம் தொடர்பாக விபரங்களை கல்வி அமைச்சின் தொழில்நுட்பக் கல்விக் கிளையின் கல்விப் பணிப்பாளருக்கு அறியப்படுத்த நடவடிக்கையெடுத்தல் வேண்டும்.

## 3.0 இளம் புத்தாக்குனர் கழகத்தின் கட்டமைப்பு

பாடசாலை இளம் புத்தாக்குனர் கழகத்தின் கௌரவ போஷகராக அதிபர் செயற்படுவார். பாடசாலையின் தொழில்நுட்ப ஆசிரியர் அல்லது வேறு ஆக்க்கத்திறனுடன் கூடிய ஆசிரியர் ஒருவரை புத்தாக்குனர் கழகத்தின் போஷகராக அதிபர் தெரிவு செய்தல் வேண்டும்.
பாடசாலையில் புத்தாக்கங்களை செய்ய விரும்பும் எந்தவொரு மாணவரும் புத்தாக்குனர் கழகத்தின் அங்கத்துவத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். புத்தாக்குனர் கழகத்தின் கட்டமைப்பு இணைப்பு 01 இல் தரப்பட்டுள்ளது.

## 4.0 பாடசாலை மட்ட புத்தாக்கப் போட்டிகள்

4.1 போட்டிகள் ஐந்து கட்டங்களை உடையதாகும்.

i. பாடசாலை மட்ட புத்தாக்கப் போட்டிகள்
ii. வலய மட்ட புத்தாக்கப் போட்டிகள்
iii. மாகாண மட்ட புத்தாக்கப் போட்டிகள்
iv. தேசிய மட்ட புத்தாக்கப் போட்டிகள்
v. சர்வதேச புத்தாக்கப் போட்டிகள்

4.2 இப் போட்டிகளின் முதல் நான்கு கட்டங்களும் வருடாந்தம் நடைமுறைப்படுத்தப்படும் என்பதுடன் இறுதிக் கட்டமானது சந்தர்ப்பம் கிடைப்பதற்கமைய நடைமுறைப்படுத்தப்படும்.

## 5.0 பாடசாலை மட்ட புத்தாக்கப் போட்டிகள்

பாடசாலை வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகளுடன் இணைந்ததாக அல்லது பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டியின் ஒரு அங்கமாக பாடசாலை மட்ட புத்தாக்கப் போட்டிகளை நடாத்துவது பொருத்தமானது. பாடசாலை முதலாம் தவணை நிறைவடைய முன்னர் சகல பாடசாலைகளிலும் புத்தாக்கப் போட்டிகளை நடாத்தி நிறைவு செய்தல் வேண்டும். நடுவர் சபையினரை பாடசாலை முகாமைத்துவ சபையிலிருந்து தெரிவு செய்வது பொருத்தமாகும் என்பதுடன், நடுவர் சபைக்கு வலயக் கல்விப் பணிப்பாளரின் பிரதிநிதி ஒருவரையும் தெரிவு செய்வதற்கு

நடவடிக்கையெடுத்தல் வேண்டும். இறுதித் தீர்ப்புக்கான மத்தியஸ்த பொறுப்பாளராக அதிபர் செயற்படல் வேண்டும். போட்டியில் முன்னிலைப்படுத்தப்படும் அனைத்து ஆக்கங்களுக்கும் சான்றிதழ் வழங்க வேண்டும் என்பதுடன் சிறந்த ஆக்கபூர்வமான படைப்புக்களை முன்னிலைப்படுத்துபவர்களுக்கு சான்றிதழ்களுக்கு மேலதிகமாக பரிசில்கள்/ பதக்கங்களை வழங்க நடவடிக்கையெடுத்தல் வேண்டும். இருப்பினும் பரிசில்கள் மற்றும் பதக்கங்களை வழங்குவது தொடர்பான இறுதித் தீர்மானம் அதிபராலேயே எடுக்கப்படல் வேண்டும் என்பதுடன், இதற்காக செலவுகளை பாடசாலை ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும். பாடசாலை மட்ட புத்தாக்கப் போட்டிகளில் நிலைகளைப் (முதலாம், இரண்டாம், மூன்றாம் மற்றும் திறமை நிலைகள்) பெற்றுக் கொள்ளும் ஆக்கங்கள் வலய மட்ட புத்தாக்கப் போட்டிகளுக்கு முன்னிலைப்படுத்தப்படல் வேண்டும் என்பதுடன் இது தொடர்பாக ஒவ்வொரு வருடமும் மார்ச் மாதம் நிறைவடைய முன்னர் வலயக் கல்விப் பணிப்பாளரை அறியப்படுத்த வேண்டும்.

## 6.0 வலய மட்ட புத்தாகப் போட்டிகள்

பாடசாலை மட்டப் புத்தாக்கப் போட்டிகளில் தெரிவு செய்யப்பட்டு, அதிபரால் முன்னிலைப்படுத்தப்படும் புத்தாக்கங்கள் வலய மட்ட புத்தாக்கப் போட்டிகளுக்கு தகுதி பெறும். வலய மட்டப் புத்தாக்கப் போட்டிகள் யாவும் வலயக் கல்விப் பணிப்பாளரால், வலய புத்தாக்க ஒருங்கிணைப்பு பணிப்பாளரூடாக ஒழுங்கு செய்யப்படல் வேண்டும். கல்வி அமைச்சு மற்றும் இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு ஆகியன ஒன்றிணைந்து பயிற்றுவித்த நடுவர்கள் வலய மட்ட புத்தாக்கப் போட்டிகளில் நடுவர் சபையில் உள்ளக்கப்பட்டிருத்தல் வேண்டும். வலயக் கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளரிடம் வினவி நடுவர் சபையைப் பெற்றுக் கொள்ள வேண்டும். வலய மட்ட புத்தாக்கப் போட்டிகளின் பிரதான மத்தியஸ்தராக வலயக் கல்விப் பணிப்பாளர் செயற்பட வேண்டும். வலய மட்டப் போட்டிகளில் முன்னிலையாகும் அனைத்து புத்தாக்கங்களுக்கும் பங்குபற்றுகைக்கான சான்றிதழ் வழங்கப்பட வேண்டும் என்பதுடன், உயர் திறமைகளை வெளிக்காட்டும் புத்தாக்கங்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படவேண்டிய அதே நேரம், அவர்களுக்கு பரிசில்கள் மற்றும்/ அல்லது பதக்கங்களை வழங்குவது தொடர்பாக நிதி நிலைமைகளைக் கருத்தில் கொண்டு வலயக் கல்விப் பணிப்பாளரால் தீர்மானிக்கப்படல் வேண்டும். வலய மட்டப் போட்டிகளுக்கு அவசியமான செலவுகளை வலயக் கல்வி அலுவலகத்தினூடாக செய்துகொள்ள வேண்டும். வலய மட்ட புத்தாக்கப் போட்டியில் தெரிவு செய்யப்படும் உயர் தேர்ச்சிகளை வெளிக்காட்டக்கூடிய புத்தாக்கங்களை (10-20 புத்தாக்கங்கள் இருப்பது பொருத்தமானது) மாகாண மட்டப் போட்டிகளில்

முன்னிலைப்படுத்துவதற்காக தெரிவு செய்தல் வேண்டும். இது தொடர்பான விபரங்கள் ஒவ்வொரு வருடமும் ஜூன் மாதம் 30ம் திகதிக்கு முன்னர் மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு அறிவிப்பதற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் நடவடிக்கையெடுத்தல் வேண்டும்.

**7.0 மாகாண மட்டப் புத்தாக்கப் போட்டிகள்**

ஒவ்வொரு வருடமும் ஆகஸ்ட் மாதம் 31ம் திகதிக்கு முன்னர் மாகாண மட்ட புத்தாக்கப் போட்டிகளை நடாத்தி நிறைவு செய்தல் வேண்டும். மாகாண மட்ட புத்தாக்கப் போட்டிகளை ஒருங்கிணைப்புச் செய்யும் கல்விப் பணிப்பாளர், இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் ஒருங்கிணைப்புடன் இப் போட்டிகளை ஒழுங்கு செய்தல் வேண்டும். நடுவர் சபையினர் இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவினால் பிரேரிக்கப்படும் என்பதுடன், கல்வி அமைச்சின் தொழில்நுட்பக் கல்விப் பணிப்பாளர் மத்தியஸ்தராக செயற்படுவார். மாகாண மட்ட புத்தாக்கப் போட்டிகளில் கலந்துகொள்ளும் அனைத்து புத்தாக்குனர்களுக்கும் பங்குபற்றுகைக்குரிய சான்றிதழ்கள் வழங்கப்படும். திறமைகளை வெளிக்காட்டக்கூடிய ஆக்கங்களுக்கு திறமைச் சான்றிதழ்களும், எதிர்பார்க்கப்பட்ட தேர்ச்சிகளை உடைய புத்தாக்கங்களுக்கு சான்றிதழ்கள், பரிசில்கள் மற்றும் பதக்கங்களும் வழங்கப்படும். மாகாண மட்ட புத்தாக்கப் போட்டிகளுக்குரிய செலவுகள் யாவும் இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும். மாகாண மட்ட புத்தாக்கப் போட்டியில் தெரிவு செய்யப்படும் நிலைகளைப் (முதலாம், இரண்டாம், மூன்றாம்) பெற்றுக் கொள்ளும் அனைத்துப் புத்தாக்கங்களும், சஹசக் நிமவும் போட்டியின் நியதிகளுக்கு அமைய தேசிய மட்டப் போட்டியில் முன்னிலையாவதற்கு தகுதி பெறும்.

**8.0 தேசிய மட்ட புத்தாக்கப் போட்டிகள்**

தேசிய மட்ட புத்தாக்கப் போட்டிகள் பிரதி வரும் ஒக்டோபர் மாதத்தில் நடாத்தப்படும். தேசிய மட்ட புத்தாக்கப் போட்டிகளை ஒழுங்கு செய்யும் செயற்பாடுகள் கல்வி அமைச்சு மற்றும் இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும். நடுவர் சபையின் இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவினால் நியமனம் செய்யப்படுவர் என்பதுடன் ஆணைக்குழுவின் நிர்வாக சபையானது இறுதி மத்தியஸ்தத்திற்கு பொறுப்பாக செயற்படும். தேசிய மட்டப் புத்தாக்கப் போட்டிகளில் முன்னிலைப்படுத்தப்படும் அனைத்து புத்தாக்கங்களுக்கும் பங்குபற்றுகைச் சான்றிதழ் வழங்கப்படும் என்பதுடன், உயர் மட்டத் திறன்களை வெளிக்காட்டும் ஆக்கங்களுக்கு திறமைப் பரிசில்கள் மற்றும் பதக்கங்கள் என்பன வழங்கப்படும்.

**9.0** **சர்வதேச புத்தாக்கப் போட்டிகள்**

9.1 தேசிய மட்டப் போட்டிகளிலிருந்து தெரிவு செய்யப்படும் 5-10 புத்தாக்கங்கள் (வருடத்திற்குரிய நிதி ஒதுக்கீட்டு வரையறைகளுக்கமைய இது தீர்மானிக்கப்படும்) இதில் முன்னிலைப்படுத்தப்படும் என்பதுடன் அவ் ஆக்கங்களை மேற்கொண்ட மாணவர்களும் சர்வதேச புத்தாக்கப் போட்டிகளில் கலந்துகொள்வதற்கு வாய்ப்பளிக்கப்படும்.

9.2 பாடசாலை மட்ட புத்தாக்கங்களை மேம்படுத்துவதற்கு அவசியமான சர்வதேச மட்டத்திலான படைப்பாற்றல் தொடர்பான புரிதலை வழங்குவது இதன் குறிக்கோளாகும் என்பதுடன் புத்தாக்கங்களை மேற்கொள்வதற்காக நேரடியாக தங்களது பங்களிப்பினை வழங்கிய உத்தியோகத்தர்கள், அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கும் சர்வதேச புத்தாக்கப் போட்டிகளில் மாணவர்களுடன் இணைந்து பங்கேற்பதற்கு வாய்ப்பளிக்கப்படும். இதற்கான முழுச் செலவுகளையும் தனிப்பட்ட ரீதியில் ஏற்றுக் கொள்ளவேண்டியேற்படும் என்பதுடன் நிதி ஒதுக்கீடுகளின் இருப்பு நிலைமைக்கு அமைய முழுச் செலவினையும் அல்லது செலவின் ஒரு பகுதியை கல்வி அமைச்சு வழங்குவதற்கு நடவடிக்கையெடுக்கும்.

**10.0** **காப்புரிமை (பேட்டண்ட்) அனுமதிப் பத்திரம் வழங்குதல் மற்றும் முயற்சியாண்மைக்கு வழிவகுத்தல்.**

தேசிய மட்டப் புத்தாக்கப் போட்டிகளில் தெரிவு செய்யப்படும் சிறந்த புத்தாக்கத்தை புலமைச் சொத்துரிமை அலுவலகத்தில் பதிவு செய்வதற்கு அவசியமான வழிகாட்டல்களை புலமைச் சொத்துரிமைப் பணியகத்தினூடாக வழங்குவதற்கு நடவடிக்கையெடுக்கப்படும். அதே போன்று வணிக ரீதியாக மேம்படுத்த முடியும் என்பதாக ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும் புத்தாக்கங்களை, அதற்குப் பொருத்தமான முயற்சியாண்மையாளர்களுக்கு முன்னிலைப்படுத்துவதனூடாக புத்தாக்குனருக்கும் இதனூடான பிரதிபலன்களைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டிய சந்தர்ப்பங்களில் இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு அதற்கான பங்களிப்பினை வழங்கும்.

**11.0** **ஏனையவை**

11.1 மேற்கூறப்பட்ட அனைத்து கட்டங்களிலும் புத்தாக்கங்களை முன்னிலைப்படுத்தும் மாணவர்களும் தமது புத்தாக்கத்திற்குரியதாக செயலாற்றுகை அறிக்கை ஒன்றை பேணிவருவது பொருத்தமானது. எவரேனும் ஒரு மாணவர் புத்தாக்கம் ஒன்றை தயாரித்த உடன் அதனை தனது பெயரில் இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் இணையத்

11.6 புத்தாக்கங்களுக்கு புலமைச் சொத்துரிமையினைப் பெற்றுள்ள அனைத்து புத்தாக்குனர்களும் ஜனாதிபதி விருதுப் போட்டியில் கலந்துகொள்வதற்கு தகுதி பெறுவார்கள். அப் போட்டியில் கலந்துகொள்வதற்காக உரிய மாதிரிப் படிவங்கள் மற்றும் இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவினால் அனுமதிப் பத்திரங்களை உடைய புத்தாக்குனர்களுக்கு தபால் மூலமாக அனுப்பிவைக்கப்படும்.

11.7 எனது சம இலக்கம் மற்றும் 2006.06.06ம் திகதியுடைய இலக்கம் 2006/23 சுற்றுநிருபம் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது என்பதுடன், மொழிபெயர்ப்புக்களிடையே பொருத்தப்பாடினை ஏற்படும் பட்சத்தில் சிங்கள் மொழி மூல சுற்றுநிருபம் வலுப்பெறும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஜே.எம் திலகா ஜயசுந்தர
செயலாளர்

பிரதிகள்:

1. கல்விப் பணிப்பாளர் (தேசிய பாடசாலைகள்) - தகவலுக்காக
2. கல்விப் பணிப்பாளர் (பாடசாலை செயற்பாடுகள்), கல்வி அமைச்சு - தகவலுக்காக

இணைப்பு 01

# இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு

## பாடசாலை இளம் புத்தாக்குனர் கழகங்களை தாபித்தல்




தொலைபேசி - 011-2676650

தொலை நகல் - 011-2676646

இணையத் தளம் - www.slic.gov.lk

மின்னஞ்சல் - info@slic.gov.lk

Youtube அலைவரிசை - Sri Lanka Inventors

பணிப்பாளர்,
இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு
05ம் மாடி,
"மெஹெவர பியச" கட்டடம்,
கொழும்பு 05.